# மணிவிழா மலர்



பொன். பாலசுந்தரம் தெய்வநாயகி தம்பதிகள்



திரு.பொன் பாலசுந்தரம் அவர்களால் கனடா கொண்டு செல்லப்பட்டு ஜேரால்ட் த பார்லிமென்ட் வீதியில் இவரால் ஸ்தாபிக்கப்பட்ட மூலஸ்தானத்தில் வீற்று அருள்மழை பொழியும் ஸ்ரீ முத்து விநாயகர்.

## சமர்ப்பணம்..!

அன்புடன்.......

அகவை அறுபது கண்டு ஆனந்தம் கொள்ளும் இவ்வேளையில் எங்களை இவ்வுலகிற்கு படைத்த இறைவனுக்கும்.....

இவ்வுலகில் எங்களை தமது பிள்ளைகள் என மகிழ்வுடன் பெற்றெடுத்த எங்கள் தாய்-தந்தையரின், மாமா-மாமி பாதங்களில் இந்த சிறப்பு மலரினை அர்ச்சனையாக்குகின்றோம்....

நன்றி..

உங்கள் செல்வங்கள்..
**திரு .பொன்.பாலசுந்தரம்**
**திருமதி .தெய்வநாயகி.**

## வாழ்த்துகின்றேன்..!

புங்குடுதீவு கிழக்கு கலட்டி ஸ்ரீ வரசித்தி விநாயகரின் பரிபூரணமான திரு-வருளை நாள்தோறும் வணங்கி நல்லருள் பெற்று அல்லல் நீங்கி அருள்வழி பெற்று கல்வியில், நற்பண்புகளில் சிறந்து விளங்கி, வர்த்தகத்துறையில் மேன்மையுற்று பெற்றவர், உற்றவர், உடன் பிறந்தோர், சுற்றத்தவர், கடமைகளையெல்லாம் கண்ணியம் தவறாது சிரமேற்கொண்டு பணியாற்றி இல்லறம் எனும் நல்லறத்தில் தெய்வநாயகியுடன் இரண்டறக் கலந்து இன்புற்று,

" இல்வாழ்வான் என்பான் இயல்புடைய மூவர்க்கும்
நல்லாற்றின் நின்ற துணை "

எனும் வள்ளுவப் பெருந்தகையின் வாக்கிற்கு அமைய பெற்றோர், குரு ஆகியோருக்கும் அறத்தின் வழி நின்று குடும்ப வாழ்வை நல்வாழ்வாக வாழ்ந்து

" பெறுமவற்றுள் யாமறிவ(து) இல்லை அறிவறிந்த
மக்கட்பே(று) அல்ல பிற "

எனும் வாக்கியத்திற்கமைய அறிவலும், ஒழுக்கதத்திலும் ஆற்றலிலும் சிறந்து விளங்கும் மக்கட் செல்வத்தையும் பெற்று பூவுலகில் பிறந்ததினாலான நற்பயனை பூவுலகிற்கு ஆற்ற சமூகப் பணி, சமயப் பணி, தமிழப்பணி, என அனைத்துப் பணிகளிலும் முழுமையாக அர்ப்பணித்து அளபடப்பரிய சேவைகளைப் புரிந்து பிறந்த மண்ணிலும் புலம் பெயர்ந்து வாழும் மண்ணிலும் பேரோடும் புகழோடும் பல்வகைச் சிறப்புகளுடனும் வாழும் பொன் மனத்தான் பொன்.பா.பாலசுந்தரம் -தெய்வநாயகி தம்பதிகள் 60ஆவது வயது விஷ்டியப்த பூர்த்தி மணிவழா காணும் இவ்வேளையில் இறைவன் திருவருளாளும் பெற்றோர் பெரியோர் நல்ஆசி வாழ்த்துக்களுடனும் மேலும் பல்லாண்டு காலம் தங்களின் சீரிய நற்பணிகள்மேன்னையுற்று விளங்க சரீர தைரியம், மனத் தைரியம், ஆருாக்கிம், நீண்ட ஆயுள், நோயற்ற வாழ்வும் குறைவற்ற செல்வத்துடனும் துன்பமில்லாத இன்பமான பெருவாழ்வு வாழவும் பதினாறு செல்வப் பேறுகளும் குறைவின்றி நிறைவுடன் வாழ எல்லாம் வல்ல புங்குடுதீவு கிழக்கு கலட்டி ஸ்ரீ வரசித்தி விநாயகர் திருவருளும், ரொரன்ரோ ஸ்ரீ வரசித்தி விநாயகர் திருவருளும் நிறைவாகக் கிடைக்கப் பிரார்த்தித்து ஆசி கூறி வாழ்த்துகின்றேன்.

" சிவாச்சார்ய கலாநிதி "
**பஞ்சாட்சர விஜயகுமார குருக்கள் (ஜயாமணி)**
புங்குடுதீவு கலட்டி ஸ்ரீ வரசித்தி விநாயகர் தேவஸ்தானம்
ரொரன்ரோ ஸ்ரீ வரசித்தி விநாயகர் தேவஸ்தானம்
(பிரதமகுரு, ஆலய முதல்வர்)

# SRIDURKA HINDU TEMPLE

Hindu Church

(A Regd. Religious and Charitable Organization . Charity No: 13903 0043 RR0001)

30 Carnforth Road . Toronto, Ontario, CANADA M4A 2K7 . www.durka.com
Telephone 416-759 9648 . priest@durka.com . Fax 416-751 7939

THURKESWARAM
*(Religious name of the temple)*

**Senior Minister**
**Chief Priest**
**Rev. K. Thiagarajahkurukkal**

**President**
**Rev. K.Thiagarajahkurukkal**

**Secretary**
**Mr. R.Vaithilingam**

**Treasurer**
**Mr. G.Buvanendran**

**Administrator**
**Kris Sivapragasam**

**Everyone together under universal love**


உ
சிவமயம்
**திரு திருமதி பொன். பாலசுந்தரம், தெய்வநாயகி தம்பதியினரின்**
மணிவிழா சிறக்கவும், பெருவாழ்வில் தழைக்கவும்
துர்க்கேஸ்வரம் பிரதம குருக்கள்
கனடாஇந்துமத பீடாதிபதி
"மஹாகுரு" **சிவஸ்ரீ தியாகராஜ கணேஸ்சுவாமிகளின்**

# ஆசிநிறை வாழ்த்து

இறைவனும் இறைவியும் இல்லறவாழ்வு என்னும் இணையிலா இன்ப நிலையை மானிடர்களுக்கு நல்அறமாக வழங்கியிருக்க, அவ்வாழ்வினை, அகத்தும் புறத்தும் உண்மையுடன் வாழ்ந்திடும் இனிய குடும்பம் பொன்.பாலசுந்தரம் தம்பதியினர்.

இவர்கள் இன்று மணிவிழாக்காணும் போது, இருவரும் வாழ்வினில் அடைந்த பெருமைகளும் நிறைவுகளும் இனிவரும் தலைமுறையினருக்கு நல்லதொரு எடுத்துக்காட்டாக விளங்கும் என்பதையே நாம் உணர்கிறோம்.

திருவள்ளுவர் குறளில் சொன்னது போல,

"பயன்மரம் உள்ளூர்ப் பழுத்தற்றால் செல்வம்
நயனுடை யான்கண் படின்"

பயன்தரும் மரமாக, தன் வீட்டுக்கும், ஊருக்கும், நாட்டுக்கும் நன்மை தரும் வகையில் வாழ்ந்து வருபவர் பொன்.பாலசுந்தரம் தம்பதியினர். சிறுவயது முதலே தெய்வபக்தி உடையவர்களாக விளங்கி, ஊரில் உள்ள ஆலயத் திருப்பணிகளுக்கு உவந்து வழங்கியதுபோல, தான் சென்ற இடங்களில் எல்லாம் திருப்பணிசெய் சிந்தையராக திகழ்பவர். தெய்வபக்தியில் தீவிர நாட்டமுடைய இவர்களின் பக்தியை பல காலம் கண்டிருக்கிறேன். தாம் செய்கிற ஒவ்வொரு நல்ல விடயங்களும், தமக்கும் தம் சந்ததிக்கும் சிறப்புக்களை நல்கும் என்னும் தத்துவத்தினை நன்றாகவே புரிந்து கொண்டவர் இவர். அத்தகையை நன்மனம் கொண்டமையால், வாழ்க்கையிலே எதையெல்லாம் பெறவேண்டுமோ, அதையெல்லாம் பெறும் பாக்கியம் இவர்களுக்கு கிடைத்திருக்கிறது.

வாழ்க்கை என்பது ஒரு கல்விக்கூடம். அங்கு கற்கின்ற ஒவ்வொரு பாடமும், அடுத்த நிலைக்கான படிக்கற்கள். அந்தப் பள்ளிக்கூடம், ஒருவர் வாழ்க்கையில் மணிவிழாக் காணும்போது பல்கலைக் கழகம் ஆகின்றது. அதில் தேர்ச்சி பெற்ற பட்டதாரிகளாவே இத்தம்பதியினர் விளங்குகின்றனர்.

காளமேகப் புலவர் பாடியது போல,

"துதிவாணி வீரம் விசயம் தானம் துணிவு தனம்
மதிதானியம் சௌபாக்கியம் போகம் அறிவு அழகு
புதிதாம் பெருமை அரும் குலம் நோவகல் பூண்வயது
பதினாறு பேறும் தருவாய் மதுரைப் பராபரனே"

இன்னும் நீடூழி காலம் வாழ்ந்து பொலிவுற இவ்வினிய தம்பதியினரை மனமார வாழ்த்துகிறோம். விளக்கு என்பது தாமும் ஒளி பெற்று, பிறர்க்கும் ஒளி தருவது போல, தங்களின் வாழ்க்கை மூலமாக, இல்லற ஒளியை அனைவருக்கும் தந்துகொண்டிருக்கும் திரு. பொன் பாலசுந்தரம் தம்பதிகளுக்கு அஷ்ட ஐஸ்வர்யங்களையும் நல்க, துர்க்கேஸ்வரம் ஸ்ரீதுர்க்காதேவி அம்பாளை வணங்கி ஆசிவழங்குகிறோம்.

சுபமஸ்து.

துர்க்கேஸ்வரம், ஸ்ரீதுர்க்காதேவி அம்பாள் திருக்கோவில்

தவத்திரு குன்றக்குடி அடிகளாரின் ஞானவாரிசு,
கனடா ஆதி அருள்நெறி மன்றத்தின் நிறுவனர்,
வெள்ளி நாக்கு நாவலர், பொன் நாவர்,
புலவர் ஈழத்துச் சிவானந்தன் அவர்கள் வழங்கிய வாழ்த்துரை.

திருமிகு பொன் பாலசுந்தரம் அவர்கள் அழகிற்கு இனியாளான தெய்வநாயகி அவர்களுடன் இன்புற்று அமர்ந்து அகவை அறுபதைத் தொட்ட பொன்நாளை வரவேற்று, பொன் பாலனாரை வாழ்த்துகின்றேன்.

பொன்பாலனார் புக்குடுதீவுப் புதல்வர், வட்டுக்கோட்டையில் வாழ்க்கைத் துணை நலத்தை வரித்துக்கொண்டவர். இவருடைய இளமைப் பருவம் தொடக்கம் இன்றுவரை இவரை நான் அறிவேன். சின்ன வயதிலே-யே தொழில் சிந்தனை மிக்கவராய் விளங்கியவர். ஓடி ஓடி உடைப்பதில் சலிப்படையாச் சதுரர். சுய முயற்சியால் முன்னேறி முதலாளியாய் விளங்கியவர்.

ஈதல் இசைபட வாழ்தல் என்னும் இவருடைய இலட்சிய நோக்கால் சமுதாயம் பெற்ற நன்மைகள் பலவாகும். ஆலயத்திருப்பணி, அருள் நெறிப் பொதுப்பணிகளால் மக்கள் மத்தியில் மதிப்பார்ந்த செல்வனாய் திகழ்ந்தவர்.

புங்குடுதீவு மடத்துவெளி வயலூர் முருகன் ஆலயத் தண்ணீர்ப்பந்தல் சேவை, வட்டுக்கோட்டை துணைவி முருகன் ஆலயத் திருவிழா உபயம், கனடா முத்து வினாயகர் ஆலய நிர்மாணம் முதலியன பொன் பாலனாரின் பொது நோக்கு பரிமாணங்களாகும். தென் புலத்தார், தெய்வம், விருந்து, ஒக்கல் தான் என்று ஐம்புலத்தாறு ஓம்பிய இவருடைய தாளாண்மை இவரைச் சமாதான நீதவான் ஆக்கிப் பெருமைப்படுத்தியது.

பொன்பாலனார் இளமை பொங்கிப் பூரித்து
படிப்படியாக ஏணியில் ஏறியும்
அடி அடியாய் அளந்து நடந்தும்
தன்னை நம்பித் தனிவழி சென்றும்
தூய வாழ்வில் அறுபது வயதை
துணைவி தெய்வநாயகி துணையுடனே
மக்கள் மருமக்கள் பேரர் களிப்படைய
எட்டினார் என்பது இன்பக்களிப்பு.

- புலவர். ஈழத்துசிவானந்தன்.

S.Kathiravelu. J.P
(All Island)
Retired Engineer.SLBC.
A225/42 Government Flats
Maligawatta. Colombeo-10

3063 Kingston Rd
Scarborough ON
M1M 1R8

## திரு.பொன் பாலசுந்தரம் தெய்வநாயகி தம்பதிகளின் மணி விழா நிகழ்வு 2011ம் ஆண்டு.

எங்கள் நட்புக்கும் நன் மதிப்புக்கும் சிறப்புடைய திரு.பொன் பாலசுந்தரம் தெய்வநாயகி அன்புத் தம்பதிகள் தங்கள் மணிவிழா கொண்டாடுவதை மிக மன மகிழ்ச்சியுடன் வாழ்த்துகிறோம்.

கடந்த முப்பது வருடங்களுக்கு முன்னர் ஒரு சிறந்த வர்த்தக பிரமுகராக கொழும்பு மத்தியில் பிரகாசித்து தனது தந்தையார் தொழில் நிலையத்தை சிறப்புடன் செயலாற்றும் கால கட்டத்தில் பல இலங்கை வானொலி நண்பர்கள் தொடர்பாலும் முன்னை நாள் அமைச்சர் கௌரவ எம். திருச்செல்வம் கியூ.சி அவர்களின் சிறந்த மதிப்பை பெற்றவராக விளங்கியவராகிய அன்பர் பல பல சமூக தொண்டு, சமய தொண்டு, வர்த்தக சபை போன்ற பல பல செயல்களில் சிறப்பை பெற்றார்.

இவருக்கு கௌரவ அமைச்சர் எம்.திருச்செல்வம் பெயரால் ஒரு நற்பணி மன்றம் கொழும்பு விவேகானந்த சபையில் அமைச்சர் இறந்த பின்பு இவரின் தலைமையில் இன்றும் தொடருகிறது.

இவரின் சேவை சிறப்பித்து இவருக்கு சமாதான நீதவான் பதவியும் வழங்கி ஒரு சிறப்பு பெருவிழா நடைபெற்றது. இதில் நானும் பல பெரியார்களும் பங்கு பற்றியதை இன்றும் மறக்கவே முடியவில்லை.

இந்த நிலையில் ஒரு சமூகசேவை தொண்டன் ஒரு மணி விழா கொண்டாடும் நிகழ்வை நாங்கள் சயலரும் பெருமையுடன் வாழ்த்துகின்றோம்.

அன்பு நண்பன்..
**எஸ்.கதிரவேலு. ஜே.பி.**

## அகவை அறுபதை எட்டும் அன்புத் தம்பிக்கு அக்காவின் வாழ்த்துரை!

பொன் கொடு தீவாம் புங்குடுதீவில் கலட்டி வரசித்தி விநாயகர் அருள்
பொழியும் ஆலடிச் சந்திக்கு அருகாமையில்

" மண்ணில் நல்லவண்ணம் வாழலாம் வைகலும் எண்ணின்ல்ல
கதிக்கு யாதுமோர் குறைவிலை "

என்ற சம்பந்தர் தேவாரத்திற்க அமைய வாழ்ந்த பெரியார் பொன்.கனகசபை என்பவருக்கு ஒரே மகனாகய், இரு பெண் சகோதரியர்களுடன் பிறந்த பாலசுந்தரம் எனும் அன்புத் தம்பி பொன்.பாலன் அகவை அறுபதை அடைந்த அக்காலை அவரை வாழ்க! வாழ்க! பல்லாண்டுகள் என வாழ்த்துவதில் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன்.

இவர் சிறுவயதிலேயே நல்ல சிந்தனைகள், நல் அறிவு, நன் முயற்சி உடையவராக சுற்றம் பேணி அனைவரையும் அன்பால் கவர்ந்தவர். தன் முயற்சியாலும், அயராத உழைப்பாலும் முன்னேறி பெரும் வர்த்தகராக மிளிர்ந்தார். பெற்றார் பணி, நற்பணி, ஆலயத்திருப்பணி ஆகியவற்றில் விரும்பிப் பங்குகொண்டு பிறந்த மண்ணுக்கும் பெருமை சேர்த்தார்.

தெய்வத்தின் அருளால் தெய்வநாயகியை மணம் புரிந்து குழந்தைச் செல்வங்களைப் பெற்று சீரும் சிறப்புமாக வாழ்வாங்கு வாழவைத்தார்.

" வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன்
வான் உறையும் தெய்வத்துள் வைக்கப்படும் "

எனும் வள்ளுவன் வாய்மொழக்கேற்ப அறுபது ஆண்டுகளை உலக மக்களின் தேவைகளுக்காகப் பயன்படுத்திய இவர் ஆண்டவன் கொடுக்கும் சன்மானமான ஆண்டுகளை உள்ளத் தேவைகளை ஆய்ந்து அதன் வழி நடந்து பயன் பெற்று, சிறப்புற வாழ்வைத் தொடர எல்லாம் வல்ல கலட்டி வரசித்தி விநாகர் அருள் வேண்டி வாழ்த்துகிறேன்.

**அன்புடன் திருமதி.லோகநாயகி அருளலிங்கம்**
ஓய்வு பெற்ற ஆசிரியை - புங்குடுதீவு.

புங்கை மாநகரின் புதல்வன்...

## பொன் பாலசுந்தரம் அரும்பெரும் துணையாம் தெய்வநாயகி தம்பதிகளின் மணிவிழாவின்போது வாழ்த்தி வழங்கிய வாழ்த்துரை.

இலங்கை மாநகரின் ஈழமணித் திருநாடாம், இதயமென திகழ்ந்திடும் யாழ்ப்பாண பெரு நகரில் சப்த தீவகங்களில் முத்தாய் இலங்கிடும் புங்கை மாநகரெனும் புங்குடுதீவு நகரில் அருந்தவப் புதல்வனாய் அவனியில் அவதரித்தார்.ஆரம்பக் கல்விதனை புங்குடுதீவு கணேச மகாவித்தியாசாலையிலும், கொழும்பு விவேகானந்தா வித்தியாசாலையிலும் சிறப்புடன் கல்வி கற்று துடிப்பு மிக்க மாணவனாய் திகழ்ந்து, வர்த்தகத்தில் நாட்டம் கொண்டு வித்தகராய் திகழ்ந்து தெய்வநாயகி எனும் நங்கையை கரம் பற்றி இல்லறம் எனும் நறும் பூஞ்சோலையில் சிறந்து பெறற்கரிய பிள்ளைச் செல்வங்களை பெற்றெடுத்து ஈடிலாப் பெரும் செல்வம் வாழ்வில் பெற்று, எல்லோரிடமும் இனிதாய் பழகிடும் ஏற்றமிகு பண்பாளர் பாலசுந்தரம் தம்பதியர் மண வாழ்வில் இணைந்திட்டு இன்று மணிவிழாக் கண்டிடும் நாள எம் உள்ளம் பூரித்திடும நன்நாளாகும்.

தியாகத்தில் வளம் பல பெற்று வாழ்ந்ததோடு, சமாதான நீதவனாய் கொழும்பு மாநகர் திருட்செல்வம் அறப்பணி மன்றத் தலைவராய், கனடாவில் புலம்பெயர்ந்து வந்தும் கனடா அருள் மிகு முத்துவினாயகர் தேவஸ்தானத்தின் நிறுவனராய் திகழ்ந்தும், இங்கு வாழும் எல்லா ஊர் மக்களோடும் இனிதாய் பழகி, கனடா முதியோர் சங்க நிகழ்வுகளிலும், இங்கு இடம் பெறும் சமய , சமூக நிகழ்வுகள் எல்லாவற்றிலும் பங்கு கொண்டு எல்லோராலும் பெரிதும் விரும்பப்படும் மனிதராய் திகழ்ந்து வரும் என் அன்புக்குரிய பாலசுந்தரம் தம்பதியர் மணிவிழாக்கானும் இன்றைய நாளை மிகுந்த மன மகிழ்வோடு வரவேற்று இத் தம்பதியர் உடல் நலத்தோடு இன்னும் பல ஆண்டுகள் வாழ்ந்திட வேண்டுமென எல்லாம் வல்ல கண்ணகி அம்பிகையை வேண்டி தொழுகின்றேன்.

வாழ்க நூறு வாழிய பல்லாண்டு..

**சோம சச்சிதானந்தன்.**
தலைவர்.
புங்குடுதீவு பழைய மாணவர் சங்கம் கனடா.

## வாழ்க நீ மருகா மணிவிழா நாயகா.

மணிவிழா காணும் பொன் பாலசுந்தரம் அவர்கள் எங்கள் மண்ணின் மைந்தன்.

எங்கள் குடும்பத்தில் உறுப்பினர். மருகர் முறையினர். முயற்சி உடையார் முன்னேறுவார் முயற்சி திருவினையாக்கும் என்ற மகாவாக்கியங்களுக்கு இலக்கணமாய் விளங்கியவர்.

சும்மா இரு என்பது ஆன்மீகக்குரல். சும்மா இராதே சுமந்திரு என்பது உலகியல் குரல். மருகர் பொன் பாலன் சும்மா இராமல் சுமந்து சுறு சுறுப்பாய் இயங்கி முன்னுக்கு வந்தவர். முதலாளியானவர். பொன் பாலனின் மன நெகிழ்வால் செழிப்புற்ற பொது அமைப்புகள் பலவாகும்.

உறவைப்பேணி, ஊரைப்பேணி, மொழி, சமயத்தைப்பேணி வாழ்ந்தவர் இவர். வாழ்வின் வளம் இன்று அறுபது அகவை தொட்டு மணி விழாக்கானும் பேறு, திருவருள் சித்தமே.

கனடாவில் முத்துவினாயகர் ஆலயத்தை நிர்மாணித்தவர். எங்கள் ஸ்காபரோ முது தமிழர் சங்கத்தில் உறுப்பினராயும், அனுசரணையாளராகவும் விளங்குபவர்.

இலங்கையில் ஜே.பி சமாதான நீதிமானாகவும் சேவை தந்தவர். இவரை இவர் துணைவியாரோடும் குடும்பத்தாரோடும் பல்லாண்டு காலம் நலமே வாழ எங்கள் குல தெய்வமான புங்குடுதீவு வரசித்தி வினாயகரின் திருவடிகளை வணங்கி வாழ்த்துகிறேன்.

இவ்வண்ணம்..
**நா.சிவபாதன்.**

## இளவல் பொன்.பாலசுந்தரனாரின்
## மணிவிழா வாழ்த்து.

இளவழகன் எங்கள் நண்பன் பாலசுந்தரனார்
வேலழகன் அருளாலே சிறந்து வாழ்கவே!
வாழ்க வாழ்கவென வண்டமிழால் வாழ்த்தும்
ஞாலமெலாம் நின்புகழ் நிலைக்கவே
பால முருகன் பணி மேற்கொண்டு பாரில்
கோல அழகனாய் பாலாஜி யென்றழைக்கும்
வெங்கடவன் பெயர் தாங்கிய பெரு மகனாய்
பொன்னை, மணியை, தங்கத்தைப் பேன்றே
ஒளிரட்டும் ஒளிரட்டும் நின் உள்ளம்
நினைக்கென இயைந்தி நல்
வாழ் நாள் முழுவதும் துணைவி யோடும்
சொந்த பந்தங்களோடும்
மனக்கு இனிதாகவாழ்க, பதினாறும்
பெற்று சீரும் சிறப்புடனும்
என்றென்றும் வாழ்க வாழ்க வாழியவே.

கண்டி கட்டுக்கலை பாடசாலை
ஓய்வு பெற்ற முன்னாள் அதிபர்
ஊரெழு கணேச வித்தியாசாலை.
அன்பருளோர் ஆழ்கடலான்.
**வேலுப்பிள்ளை பரமநாதன்.**

## புங்கை மாநகரின் தவப்புதல்வன்
## பொன் பாலசுந்தரம் துணைவியார் தெய்வநாயகி
## தம்பதியர்களின் மணிவிழாவின்போது
## வாழ்த்தி வழங்கிய வாழ்த்துரை.

இலங்கை மாநகரின் ஈழமணித் திருநாட்டின் இதயமென திகழ்திடும் சைவமும், தமிழும் வளரும் யாழ்ப்பாணம் என்னும் நல்ல நகர் சப்த தீவுக-ளில் மணிமுத்தாய் விளங்கிடும் புங்கை நகர் புங்குடுதீவு, சைவமும் தமிழும் பூத்துக்குலுங்கும் ஒரு புண்ணிய பூமி.

கடல் அன்னையால் கட்டி அணைத்து முத்தமிடப்பட்ட முதுபெரும் தீவு. உதயத்தில் சூரியச் செல்வத்தின் சுந்தரக் கைகள் பரந்து விரிந்து பசும் பொன் நிற மேனியாய் மிளிரும் எங்கள் புங்குடுதீவின் அழகே அழகு. அந்த அழகு குறையுமுன்னே ஆலய மணி ஓசையோடு அடியார்கள் பக்திப் பரவசமாய் பரந்து விரிந்த பகலவன் ஒளியையும், பறை சாற்றிய ஆலய ஒலியையும் தங்கள் விடியல் வேளை வந்து வீட்டின் கதவைத் தட்டியது என எண்ணி அன்றைய பொழுதை இன்பமாக்கவும், கடின உழைப்பிற்காகவும் தங்களை தயார் செய்யும் அந்த பொழுதுதான் எங்கள் புங்குடுதீவின் முழு மூச்சாக வாழ்ந்துகொண்டிருக்கிறது.

இவ்வூரில் அறுபதுக்கும் மேலான ஆலயங்கள், வானுயர்ந்த இராச கோபுரங்கள், சித்திரத்தேர் பவனி வரும் விசாலமா வீதிகள், பதினைந்துக்கு மேற்பட்ட பாடசாலைகள், குறிப்பாக கலட்டி பிள்ளையார், வரசித்தி வினாயகர் ஆலயம், அயலில் உயர்ந்து , பரந்து , விரிந்து விசாலமாக காட்சிதரும் ஆல மரம் என எண்ணற்ற புதுமைகளும், எண்ண முடியாத பழமைகளும் நிறைந்த எங்கள் பூமியில் ஆலடிச்சந்திக்கு அருகே வாழ்ந்த திரு.திருமதி பாலசிங்கம் பார்வதிப்பிள்ளை அம்மையாருக்கு அரும் பெரும் தவப்புதல்வனாக பாலசுந்தரம் அவதரித்தார்.

ஆரம்பக்கல்வியை புங்குடுதீவு ஸ்ரீ கணேச வித்தியாலயத்தில் கல்வி பயின்றார். பின் உயர் கல்வியை கொழும்பு கொட்டாஞ்சேனை விவேகானந்தகல்லூரியில் கற்றார். தனது கல்வியை சிறப்பான முறையில் கற்று திறமை எய்தினார். இவர் தனது பாடசாலை காலத்தில் மிகவும் சுறு சுறுப்பான திறமையை பெற்றுக்கொண்டார்.

வாழ்க்கையில் முன்னேற வேண்டுமென்ற முறையை திறமையை தேடி தன் பிறந்த ஊருக்கும் தமிழ் இனத்துக்கும் உதவி செய்யும் துடிப்பு உள்ள இளைஞனாக செயற்பட்டார்.

இவர் மத்திய கொழும்பில் பலவிதமான சுய முயற்சியில் முன்னேற்றம் கண்டார். கொழும்பு 4ம் குறுக்கு வீதி பாலகிருஸ்னன் றேடெஸ், ஸ்ரீ கதிரேசன் வீதியில் பாலாஜிஸ் விடுதி, யாழ் நகர் கன்னாதிட்டி பாலாஜி ஆகிய தனது தொழில் துறையை விருத்தி செய்து வெற்றியும் கண்டார்.

தெய்வயானை எனும் நங்கையை கரம் பற்றி இல்லறம் என்ற நல்லறப் பூஞ்சோலையில் பிள்ளைச் செல்வங்களுடன் பெருவாழ்வு வாழ்ந்தார். எல்லா மக்களுடன் இனிமையா பழகுபவர். நற் பண்பு, நற் குணங்கள் கொண்ட பண்பாளர். இவரின் அருமை பத்தினியும் சிறப்பான குணம் கொண்டவர்.

பொன் பாலசுந்தரம் தம்பதிகள் இன்று மணவாழ்வில் மணிவிழா கொண்டாடுகிறார்கள். இந்த நிகழ்வைக் கண்டு என் இதயம் பெரும் பூரிப்பை ஏற்படுத்துகின்றது.

தாயகத்தில் பெரும் பல வழங்கள் கண்டு வாழ்ந்ததோடு கொழும்ப நகரில் சமாதான நீதிபதி எனும் கௌரவத்தோடும், எம்.திருச்செல்வம் கியூசி அறப்பணி மன்ற தலைவர் பதவியில் இருந்து தமிழ் மக்களுக்கு அரும்பெரும் சேவைகள் புரிந்தார்.

கடந்த கால நாட்டுப்போர் சூழல் காரணமாக தனது மனைவி பிள்ளைகளுடன் கனடா நாட்டுக்கு குடியேறினார். கனடா நாட்டிலும் தனது சமூகப் பணி, சமயப் பணி ஆகிய நிலைகளுக்கு தொடர்ந்தும் முன் நின்று பணியாற்றி வருகின்றார்.

கனடா ரொரன்றோ பாரளமன்ற வீதியில் கலட்டி வினாயகர் நினைவாக ஸ்ரீ முத்து வினாயகர் ஆலயம் அமைத்து அதனை நித்திய பூஜைகள் நடத்த ஒழுங்கு செய்துள்ளார்.


ஒன்றாரியோ முது தமிழர் மன்றம்
ஸ்காபரோ முது தமிழர் மன்றம்
விக்ரோரியா பாக் ஹார்மனி தமிழ் முதியோர் மன்றம்

மேற் தெரிவிக்கப்பட்ட மன்றங்களின் நீண்டகால உறுப்பினர். எல்லோருடனும் அன்பாக பழகும் பண்பாளர். சகல முதியோர் நிகழ்ச்சிகளிலும் பங்கு கொள்வதோடு சகலருடனும் விருப்புடன் பழகும் செயல் திறன் உடையவர்.

என் அன்பிற்குரிய பொன் பாலசுந்தரம் தம்பதியர்களின் மணிவிழா காணும் இன்றைய நாளை மன மகிழ்வோடு வரவேற்று இத் தம்பதிகள் உடல் நலத்தோடு பல ஆண்டுகள் வாழ வேண்டுமென எல்லாம் வல்ல கண்ணகை அம்மனை வேண்டி தொழுகிறேன்.

வாழ்க நூறாண்டு வாழிய பல்லாண்டு!

வாழ்த்துபவர்...
**திரு.சின்னத்தம்பி கோபாலபிள்ளை**
முன்னாள் செயலாளர்
பழைய மாணவர் சங்கம்
புங்குடுதீவு ஸ்ரீ சண்முகநாதன் கனிஷ்ட மகா வித்தியாலயம்.
புங்குடுதீவு பழைய மாணவர் சங்க ஆரம்பகால உறுப்பினர், காப்பாளர்.



திரு.மார்க்கண்டு மகாலிங்கம்.
1006 – 301 Prudential Dr.
Scarborough ON
M1P 4V3
416 755 5238

## பொன் பாலசுந்தரம் தெய்வநாயகி தம்பதியர்களின் மணிவிழா கொண்டாட்டம் - ஆண்டு 2011

நாங்கள் என்றென்றும் நேசிக்கும் திரு.பொன் பாலசுந்தரம் தெய்வநாயகி குடும்பத்தினர் இன்று மணிவிழா காணும் நிகழ்வை பெருமையுடன் வரவேற்கிறேன். பொன் பாலசுந்தரம் அவர்கள் கடந்த பத்து வருடங்களுக்கு மேல் நட்பின் சிகரமாக விளங்கி வருகிறார்.

அன்பும் , பண்பும் கொண்ட பெருமகனார். பல பல சமூக சேவைகள், கோவில் சேவைகள், முதியோர் மன்ற நிகழ்வுகளில் மிகவும் சிறப்புடன் சகல இனத்தவர்களுடன் பழகும் வாய்ப்பினை பெற்றுக்கொண்ட மிகவும் சிறப்பு மிக்க சமூக அக்கறை கொண்ட, மனித நேயம் நிறையப் பெற்ற அருமைக்குரிய பெரியவர்.

இவர் தமிழ் மக்களின் வாழ்வையும், தனது பிறந்த மண்ணான புங்குடுதீவுவையும் நினைத்து அடிக்கடி அங்கு விஜயம் செய்து பலருக்கும் உதவும் நேயத்தையும், அதன் பாங்கையும் கண்ணாரக் காணக்கூடியதான வாழ்வை அவர் பெற்றுளளார் என நினைக்கும்போது அதனை செயலால் செய்து முடிக்கும் அன்புக்குரிய பொன் பாலசுந்தரனார் எத்துணை மதிப்பிற்குரியவர் என்பதை அவரது சேவைகளில் இருந்தே அறிந்துகொள்ளலாம்.

அவர் தனது ஓய்வு நேரங்களில் எங்களுடன் சேர்ந்து பல பொழுதுபோக்கு நிகழ்வுகளை வழி நடாத்துவர். இவரின் மணிவிழா நிகழ்வு சிறப்புற எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகிறேன்.

அன்பிற்குரியவரின் அன்பன்..
**மார்கண்டு மகாலிங்கம்.**

Mr.Mutiah Thevaraja
480. Mc Levin Ave.
Suit # 505 ON
M1B 5N9.

## பவள விழா வாழ்த்துக்கள்..
## கௌரவ பொன் பாலசுந்தரம் தெய்வநாயகி தம்பதியர்கள்.

மாசித் திங்கள் 2011 திரு.பொன் பாலசிங்கம் பாலசுந்தரம் தெய்வநாயகி தம்பதியர்களின் பவழ விழா வாழ்த்துக்களை நாங்கள் மகிழ்வுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

கடந்த ஒரு தசாப்தத்துக்கு மேல் திரு.பொன் பாலசுந்தரம், அவரின் சகோதரி ஆகியோருடன் பழகும் சந்தர்ப்பம் நான் மல்வர்ன் பகுதி முது தமிழர் மன்ற தலைவர் நிலையில் ஏற்பட்டது.

எங்கள் சங்கத்தில் மிகவும் சிறந்த அங்கத்த வராகவும், முக்கியமாக பல சிறப்பு நிகழ்வுகளிலும் முன்நின்று பலரின் போற்றுதல்களை பெற்றுள்ளார்.

இவரின் சேவை கனடா நாட்டிலும், இலங்கை கொழும்பு, பிறந்த ஊரான புங்குடுதீவு பகுதியிலும் தனது கொழும்பு மத்திய பகுதி வர்த்தக துறையின் செயலால் சிறப்பு உடையவராக புகழ் பெற்றார்.

இவர்களின் மணி விழா சிறப்பு பெற்று நீண்ட கால வாழ்வு பெற வழ்த்துகிறோம்.

அன்புடன்
திருவாளர்
**முத்தையா தேவராஜா சரோஜினி குடும்பம்.**
(முன்னை நாள் தொலை தொடர்பு அதிகாரி,
இலங்கை கடற்படைச் சேவை திருகோணமலை கடற்படை ஸ்தலம்.
முன்னைநாள் தலைவர் ஸ்காபரோ முது தமிழர் மன்றம் கனடா.)




நானும் எனது மனைவியும்..



என் அம்மா பாலசிங்கம் பார்வதிப்பிள்ளை

## எங்கள் குடும்பம்

திரு.பா.பாலசுந்தரம் அவர்களின் தந்தையும், தாயும்.



திரு.பொன்னையா பாலசிங்கம் (கனகசபை)




திருமதி. பாலசிங்கம் பார்வதிப்பிள்ளை


திரு.பா.பாலசுந்தரம் அவர்களின் அப்பப்பா, அப்பாச்சி



அமரர்.இராமநாதர் பொன்னையா




அமரர். பொன்னையா சின்னப்பிள்ளை




மலேசியா பென்சனியர் கதிரவேலு இராமசாமி என் மனைவியின் அப்பா



இராமசாமி தங்கம்மா என் மனைவியின் அம்மா



பொன். பாலசுந்தரம் அவர்களின்
அம்மப்பா - அம்மம்மாவுடன்



அம்மப்பா - அம்மம்மாவுடன்
திரு.பொன் பாலசுந்தரம் சிறுவயதில்




திரு. பா.பாலசுந்தரம் அவர்களின் அப்பப்பாவின் தம்பி
திருமதி.மா.தெய்வநாயகியின் அம்மாவின் அப்பா




திருமதி.மா.தெய்வநாயகியின் மாமாவுடன்
திர.பா.பாலசுந்தரம் சிறு வயதில்



இராசமணி(அக்கா), பாலசுந்தரம், பரமேஸ்வரி(அக்கா), பார்வதிப்பிள்ளை(அம்மா)



திரு.பரராஜசிங்கம் அவர்களின் தகப்பனார் எ.எ.கனகசபை, நான் மனைவி அக்கா சித்திரவேலு இராசமணி, அம்மா, அப்பா, என் மருமகள் சுகிர்தா, என் மருமகன் திருக்குமார் பரராஜசிங்கம்



திரு. பா.பாலசுந்தரம் - தெய்வநாயகி
கொழும்பு முகத்துவாரம் அருணாலேஸ்வரா
ஆலயத்தில் நடைபெற்ற திருமணவிழாவில்..



திருமணவிழாவில் தெய்வநாயகியின் தம்பி
இராஜசிங்கன் பொன். பாலசுந்தரம் சகோதரி
சித்திரவேலு இராசமணி



எமது திருமணவிழாவில் எனது அப்பா பாலசிங்கம், அக்கா இராசமணி, என் மனைவியின் அண்ணா திருகோணமலை வாழும் திரு.குலசேகரம், பொன். பா.பாலசுந்தரம், என் மனைவி, அவர் சகோதரி விஜயலெட்சுமி, திரு.குலசேகரம் மனைவி, என் மனைவியின் தாயார் இராமசாமி தங்கம்மா, அவர் சகோதரி செல்லம்மாவின் மகள்(மானிப்பாய்) என் தாயார் பாலசிங்கம் பார்வதிப்பிள்ளை.



எனது தாய் போன்ற திருமதி.நவரெட்னம் புகனம் தெய்வநாயகி சித்திரவேலு இராசமணி.



கொழும்பு முகத்துவாரம் அருணாலேஸ்வரர்ஆலயத்தில் நடைபெற்ற
பொன்.பா.பாலசுந்தரம்-தெய்வநாயகி திருமணவிழாவில்..
எனது திருமணவிழாவில் எனது முதல் சகோதரி பரமேஸ்வரி,அவர் கணவர்
பரராஜசிங்கம் இரண்டாவது அக்கா இராசமணி, அவர் கணவர் சித்திரவேலு.



திருமணவிழாவில் தெய்வநாயகியின் தம்பி இராஜசிங்கன்
பொன். பாலசுந்தரம் சகோதரி சித்திரவேலு இராசமணி




நான், என் இரண்டாவது மகள் பூப்புனித நீராட்டு விழாவில் எனது மனைவியுடன்.....




திரு. பொன். பாலசுந்தரம்,
திருமதி. தெய்வநாயகி தம்பதிகள்



மூத்தமகள், மனைவியுடன்..



என் அன்பான அண்ணன் திரு. கிருஸ்ணசாமி
என் மகள் தெய்வமலர் பூப்புனித விழாவில்....




ஸ்ரீ பாலாஜி திறப்பு விழாவின் போது...



ஸ்ரீ பாலாஜி விழாவில் குடும்பத்தாருடன்...




யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி பாலசிங்கம் பில்டிங்ஸ் தோற்றம்



எங்கள் குடும்பம்




எங்கள் குடும்பம்



பொன். பாலசுந்தரம் மனைவியும்..பிள்ளைகளும்..



இரண்டாவது மகள் பூப்புனித விழாவில் திருகோணமலை மைத்துனர் திரு.குலசேகரம், என் மனைவியின் தம்பி இராஜசிங்கன், அவர் துணைவியும்..



என் மூத்த மகள் திருமணவிழாவில்
என் உறவினர் புலவர் ஈழத்துச் சிவானந்தன்



என் குடும்பத்தினர்..



என் மூத்த மகளின் கணவரின் அப்பா, அம்மா, அவர் உறவினர்களுடன் நானும், மனைவியும்...



மூத்தமகள் கல்யாணத்தில் என் சித்தப்பா முறை வேலுப்பிள்ளை திருநாவுக்கரசு, நான், பக்கத்தில் என் மைத்துனர் சுப்பிரமணியம் பத்மநாதன், அவர் மனைவி கடைசியில் நிற்பவர் தம்பி சுப்பிரமணியம் தனம்



நானும், என் மனைவியும்..



என் மூத்த மகள் திருமண விழாவில் கொழும்பு ரேகா ஜுவலரி சதாசிவமும், அவர் மனைவியும்



என் இரண்டாவது மகளின் கல்யாணத்தில் சம்பந்திமார்களுடன்....



இரண்டாவது மகள் கல்யாணத்தில



மனைவி, மகன் பா.தெய்வபாலன்



நானும், என் மகன் தெய்வபாலன்



சென்னை கடற்கரை அண்ணா சமாதி முன்பாக என் குடும்பத்தவர்கள்.....



ஸ்காபரோ முதியோர் சுற்றுலாவில் திரு.பொன். பாலசுந்தரத்துடன் ஏனைய சங்க அங்கத்தவர்கள்..



தெய்வநாயகியின் சகோதரி முன்னாள் ஆசிரியை விஜயலெட்சுமி, அவர் கணவர் திரு.சுந்தரலிங்கத்துடன் அவர்களின மகளும், திரு.திருமதி. பொன். பாலசுந்தரம்-தெய்வநாயகி தம்பதிகள்.



தெய்வநாயகியின் சகோதரி வள்ளிநாயகி,
அவர் கணவர், மகள்களும்....



திரு.பொன். பாலசுந்தரத்தின் தாயாருடன்,
சகோதரியும், மருமகள்மார்களும்..




மருமகன் நிர்மலன்- மகள் லதா




மருமகன் நிர்மலன்- மகள் லதா



தெய்வநாயகியின் சகோதரி வள்ளிநாயகியுடன்
திரு.திருமதி. பொன். பாலசுந்தரம்-தெய்வநாயகி தம்பதிகள்.



முன்னாள் அமைச்சரும், ராணி வழக்கறிஞருமான
திரு. முருகேசு திருச்செல்வம்.




திரு.பொன் பாலசுந்தரம், திரு.மகாலிங்கம், திரு.கதிர்வேல் ஆகியோர்..



திரு.பொன் பாலசுந்தரம், திரு.மகாலிங்கம், திரு.கதிர்வேல் ஆகியோர்..



முன்னாள் கொழும்பு மேயர் திரு.கணேசலிங்கம் அவர்களுக்கு மாலை சூட்டி வரவேற்கும் திரு.பொன். பாலசுந்தரம் அவர்கள்..



தெய்வநாயகியின் தாயார் தங்கம்மா, திரு.சுந்தரலிங்கம் தம்பதிகள், அவர்களின் மகளுடன்..




ஸ்காபரோ முதுதமிழர் சங்கத்தின் பிறந்தநாள் விழாவில்
திரு.பொன்.பா.பாலசுந்தரம்



திரு.பொன்.பாலசுந்தரம் அவர்கட்கு ஜே.பி. நியமன கடிதத்தை திரு. கலாநிதி நீலன் அவர் காரியாலயத்தில் கொடுத்த போது...




திருச்செல்வம் பொதுப்பணி மன்ற விழாவில் திரு.கணேசலிங்கம் முன்னாள் கொழும்பு மேயருடன், திரு.பொன்.பாலசுந்தரம், நண்பர்கள்...



திரு.பொன் பாலசுந்தரம் அவர் நண்பர்களுடன்...



திரு.பொன்.பாலசுந்தரம் அவர்கட்கு ஜே.பி. கடிதத்தை
திரு.கலாநிதி நீலன்அவர் காரியாலயத்தில் கொடுத்த போது...



திருச்செல்வம் அவர்கள் ஞாபகார்த்த கூட்டத்தில் திரு.நீலன்
திருச்செல்வம்,திரு.ஆனந்தசங்கரி (த.வி.கூ), திர.மௌசூர் மௌலானா,
திரு.தேவராஜ் (ஜனாதிபதி ஆலோசகர்)



திருச்செல்வம் பொதுப்பணி மன்ற ஞாபகார்த்த விழாவில் தலைவர்களுடன் திரு.பொன்.பாலசந்தரம்..



தமிழரசுக் கட்சி பாராளுமன்ற உறுப்பினர்களுடன் திரு.பொன். பா.பாலசுந்தரம்..




மாளிகாவத்தை சித்திவிநாயகர் கோவிலுக்கு திரு.பொன் பாலசுந்தரம்
வெள்ளி அங்கி அன்பளிப்பு செய்த காட்சி



அன்பளிப்பு செய்யப்பட்ட மூலஸ்தான பிள்ளையாருக்கான
வெள்ளியங்கி சாத்தும் விழாவில் அண்ணர் திரு.கிருஸ்ணசாமி,
மகாலட்சுமி முதலாளி திரு.மாசிலாமணியுடன் திரு.பொன் பாலசுந்தரம்
கையில் வெள்ளி அங்கி. பக்கத்தில் கோவில் குருக்கள்




பிரபல தொழிலதிபரும், சென்னை அல்பட் அன்ட் பேபி அல்பட் திரையக உரிமையாளர் திரு.அல்பர்ட் முதலாளி அவர்களும், திரு.பாலசுந்தரமும்




திரு.அல்பர்ட் முதலாளியுடன் திரு.திருமதி.பாலசுந்தரம் தம்பதிகள்



கனடா ஸ்காபுரோ சீனியர் மேயர் தலைவராக கடமையாற்றும் திரு.தேவராசா அவர்களுடன்...



கனடா் திரு.கதிர்வேலுப்பிள்ளை அவர்களுடன், திரு.பாலசுந்தரம்



ஸ்ரீமுத்து விநாயகர் கோவில் திரு.பாலசுந்தரம் அவர்களால் கொடுக்கப்பட்ட உற்சவப்பிள்ளை ஸ்ரீமுத்து விநாயகருக்கு திரு.கண்ணன் குருக்கள் அபிஷேகம் செய்கிறார். பக்கத்தில் திரு.பாலசுந்தரம், அவர்மனைவி தெய்வநாயகி



கனடா ஸ்ரீ வரசித்தி விநாயகர் தேர் திருவிழாவில் நடந்த இலங்கை நாட்டுக் கலைஞர்கள் தவில், நாதஸ்வரம், ரசிக்கும் மக்களும்...



கனடா பார்லிமெண்ட் ஜேரால்ட்டில் அமைந்துள்ள
ஸ்ரீ முத்து விநாயகர் கோவில் தப்பபிஷேக
விழாவில் திரு. பொன் பாலசுந்தரம்



திரு.பாலசுந்தரம் அவர்களால் இலங்கையிலிருந்து
கொண்டு வரப்பட்ட ஸ்ரீமுத்து விநாயகர் மூலஸ்தான
விக்கிரத்தை, அதன் முன்பாக அவரால் சுற்றிவந்து
கொடுக்கப்பட்ட உற்சவப்பிள்ளை ஸ்ரீமுத்து விநாயகர்.



ஜே.பி பாராட்டு விழாவில் திரு.ஜெரால்ட், திரு.பி.பி.தேவாராஜ், முன்னாள் கொழும்பு மேயர். கணேசலிங்கம்




ஜே.பி. பாராட்டு விழாவில் முன்னாள் கொழும்பு மேஜர் மாலை அணிவிக்கிறார். பக்கத்தில் முன்னாள் இந்துகலாச்சார அமைச்சரும் இன்னாள் ஜனாதிபதி ஆலோசகர் பி.பி. தேவராஜ்







ஜே.பி. பாராட்டு விழாவில் மேரிஸ்டோா அதிபர்
திரு. லியோன பெர்ணான்டோ



ஜே.பி. பாராட்டு விழாவில் திரு. கலாநிதி நீலன்
திருச்செல்வம் அவர்கள்..



ஜே.பி.பாராட்டு விழாவில் முன்னாள் கொழும்பு மேயர் திரு. கணேசலிங்கம் நினைவுப் பரிசு கொடுத்து மகிழ்கிறார்..



ஜே.பி.பாராட்டு விழாவில் கொழும்பில் பிரபல வியாபாரியும், சென்னை அல்பிரட் அன்ட் பேபி அல்பிரட் அதிபர், பக்கத்தில் திருவாளர்.மாணவைத்தம்பி



கலாநிதி நீலன் திருச்செல்வம் அவர்கட்கு
திரு.பொன் பாலசுந்தரம் பொன்னாடை
அணிவிக்கிறார்.



ஜே.பி.பாராட்டு விழாவில் தொழில் அதிபர் அல்பட், மற்றும் அவர் மனைவி, மகளுடன்



திரு.வேலுப்பிள்ளை சபாபதி இராஜதுரை அவர்களும், திரு.வினாசித்தம்பி இராமநாதன் இவர்களுடன் அண்ணர் திரு.தம்பிப்பிள்ளை கிருஷ்ணசாமி




ஜே.பி.பாராட்டு விழாவில் திரு.வினாசித்தம்பி இராமநாதன் மாலையிட்டு வணக்கம் தெரிவிக்கிறார். பக்கத்தில் நிற்பவர் பிரபல தொழில் அதிபர். டொலர் கோப்பிரேஷன் அதிபர் திரு.செந்தில்வேல்.




திருக்கேதீஸ்வர திருவாசக மட ஸ்தாபகர். திரு. சுவாமி சரவணமுத்து அவர்கள் மாலையிட்டு ஆசிரவதிக்கிறார். அருகில் முகவை சர்தார்.



திருமதி. கோபாலபிள்ளை, திருமதி. மீனலோசனி, திரு.பொன். பாலசுந்தரம்
திருமதி. நவரெட்னம், திருமதி. சரவணமுத்து, திரு.மயில்வாகனம் ஆகியோருடன்



திரு. VRM என்று அழைக்கப்படும் வினாசித்தம்பி இராமநாதன்,
பக்கத்தில்திரு.ஜெகன் அவர்களுடன் VRM மருகனும்
கஸ்டம் ஆபிஸருமான திரு.சுந்தரலிங்கம் அவர்கள்



என் அண்ணன் முறையான திரு.கணேஸ் நல்லைநாதன், திரு.கான் அவர்களுடன் கெக்கிராவை எச்.எம்.அன்ட் கோ அதிபர் முதலானோருடன்...




பிரபல வர்த்தகர் திரு.சின்னத்தம்பி கோபாலபிள்ளை மாலையிட்டு வாழ்த்துகிறார். அருகில் பிரபல வர்த்தகர் டொலகோப்பரேசன் உரிமையாளர்



ஸ்ரீ கதிரேசன் வீதி நண்பர் திரு.ஜோன்
பொன்னாடை அணிவிக்கிறார்.



அருமை அண்ணர் திரு.கிரு்ணசாமி அவர்கள்
மாலை சூடி கட்டிப்பிடித்து மகிழ்கின்றார்.




திரு.திருமதி. கோபாலபிள்ளை, அவர் மகள், திரு.பொன். பாலசுந்தரம் பிரபல வர்த்தகர் திரு.சின்னத்தம்பி கோபாலபிள்ளை ஆகியோர்..



ஜே.பி. விழாவில் திரு. முகவை சர்தார், திரு.பொன் பாலசுந்தரம், இ.தோ.க. பிரமு-கர் யோகராஜா, பிரபல தொழில் அதிபர் திரு. வேலணை வீரசிங்கம், திரு.கம்பளைதாசன், முன்னாள் இலங்கை தி.மு.க.செயல்வீரர் திரு.மணவைத்தம்பி




திருச்செல்வம் ஐயா அவர்கள் ஞாபகார்த்த கூட்டத்தில்
திரு.மௌசூர் மௌலானா முன்னாள் அமைச்சரும், இன்னாள் ஜனாதிபதி
ஆலோசகருமான திரு.பி.பி.தேவராஜ், திருபொன். பாலசுந்தரம், திரு.சிவசிதம்பரம்,
பக்கத்தில் திரு.இரா.சம்பந்தன்



திருச்செல்வம் பொதுப்பணி மன்றத்தின் ஏற்பாட்டில் கடந்த சனிக்கிழமை விவேகானந்த சபை மண்டபத்தில் நடைபெற்ற தந்தை செல்வா நூற்றாண்டு விழாவில் மன்றத்தலைவர் பா.பாலசுந்தரம் தந்தை செல்வாவின் திருவுருவப்படத்தை திரை நீக்கம் செய்து வைப்பதை படத்தில் காணலாம்.
(படப்பிடிப்பு: எஸ்.சுரேந்திரன்)

தந்தை செல்வா நூறறாண்டு விழாவில் மன்றத் தலைவர் திரு.பொன்.பாலசுந்தரம்
தந்தை செல்வாவின் திருவுருவப் படத்தைத் திரை நீக்கம் செய்து வைக்கிறார்.



திருச்செல்வம் ஐயா அவர்கள் ஞாபகார்த்த கூட்டத்தில் திரு.மௌசூர் மௌலானா அவர்கட்கு திரு.பொன் பாலசுந்தரம் மாலை அணிவிக்கின்றார்.




திருச்செல்வம் பொதுப்பணி மன்ற கூட்டத்தில் திரு.யோகராஜ், திரு.பி.பி. தேவராஜ் அவர்களுடன் த,வி.கூ. தலைவர் திரு.சிவசிதம்பரம்

7

MONDAY THINAKKURAL 23rd JUNE 1997



திருச்செல்வம் பொதுப்பணி மன்ற ஏற்பாட்டில் வெள்ளியன்று மாலை கொழும்பு விவேகானந்த சபை மண்டபத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த் தந்தை செல்வா நூற்றாண்டு விழாவின் போது தந்தையின் உருவப்படத்தை திருச்செல்வம் பொதுப்பணி மன்றத் தலைவர் பா. பாலசுந்தரம் திறந்து வைத்த பின்பு விழாத்தலைவர், பாராளுமன்ற உறுப்பினர் பி.பி. தேவராஜ் மாலை அணிவிப்பதையும், உடற்பயிற்சி பற்றிய நூலின் முதற்பிரதியை தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர் மு.சிவசிதம்பரத்திடம் இருந்து தொழிலதிபர் வேலணை வீரசிங்கம் பெற்றுக் கொள்வதையும் பாராளுமன்ற உறுப்பினர்களான கலாநிதி நீலன் திருச்செல்வம், ஆர்.யோகராஜன், ஜோசப் பரராஜசிங்கம் ஆகியோரையும் படத்தில் காண்கிறீர்கள்.

படப்பிடிப்பு:- ஜோய் ஜெயக்குமார்



திருச்செல்வம் பொதுப்பணிமன்றக் கூட்டத்தில் மட்டக்களப்பு முன்னாள் M.P காலஞ்சென்ற திரு.யோசப் பரராசசிங்கம் உரையாற்றுகின்றார். மேடையில் மற்றைய தலைவர்கள்..



வரவேற்பு கூட்டத்தில் திரு.பி.பி.தேவராஜ், திரு.மேயர். கணேசலிங்கம், திரு.பொன்.பாலசுந்தரம்



திரு.பொன்.பா.பாலசுந்தரம் தந்தை செல்வாவின் திருவுருவப் படத்தைத் திரை நீக்கம் செய்து வைத்து வணங்குகின்றார். பக்கத்தில் திரு.முகவை சர்தார், திரு.பி.பி. தேவராஜ்.




தந்தை செல்வா நூற்றாண்டு விழாவில் மன்றத் தலைவர் திரு.பொன். பா.பாலசுந்தரம் தந்தை செல்வாவின் திருவுருவப் படத்தைத் திரை நீக்கம் செய்து வைக்கிறார். பக்கத்தில் திரு.பி.பி. தேவராஜ்.



கொழும்பு முத்துவிநாயகர் ஆலய பிரதமகுரு
திரு.காமாட்சி சுந்தரேஸ்வரரும் திரு.பொன்.பா.பாலசுந்தரம் தம்பதிகளும்...



சிறப்பு பூஜை நிகழ்வல் திரு.பொன் பா.பாலசுந்தரம் தம்பதிகள்..




திரு.பொன்.பா.பாலசுந்தரம் தம்பதிகள் பேரன் ஆகாசனுடன்....



திரு.பொன்.பா.பாலசுந்தரம் தம்பதிகளும் பேரன்மார் இரண்டு பேர்களும்
(அஜஸ்சன், ஆகாசன்)



முன்னாள் இலங்கை ஜனாதிபதி கௌரவ டி.வி.விஜயதுங்கா அவர்களுடன் திருமதி.வேலம்மா செல்லச்சாமியுடன் அன்பர் திரு.பொன் பா.பாலந்தரம்



தமது ஆத்ம நணபாகளுடன் திரு.பொன். பா. பாலசுந்தரம்...



தொழிலதிபர் திருவாளர் வேலணை திரு.வீரசிங்கம் தம்பதிகள் கனடாவில்...



தொழிலதிபர் திருவாளர் வேலணை திரு.வீரசிங்கம் தம்பதிகள் கனடா வந்த போது நண்பர்களால் கொடுக்கப்பட்ட விருந்துபசாரத்தின் போது....



பொது விழா ஒன்றில் முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும், அமைச்சரும் ஆகிய காலஞ்சென்ற முன்னாள் அமைச்சர்A.H.M.அஸ்வர் நிற்பதையும் காணலாம்



திரு.பொன்.பா.பாலசுந்தரம் நண்பர்கள் திரு.வேலணை வீரசிங்கம், முன்னாள் இலங்கை வானொலி இன்ஜினியர் திரு.கதிர்வேல், தொழில் அதிபர் திரு.சின்னத்தம்பி கோபால்பிள்ளையுடன்..




அமைச்சர்.M.H.மொகமட் அவர்களிடம் திரு.பொன் பாலசுந்தரம் பரிசு பெறுவதையும் பக்கத்தில் ஜனாதிபதியின் ஆலோசகர் திரு. A.H.M.அஸ்வர் நிற்பதையும் காணலாம்



மற்றுமொரு நிகழ்வின் போது காலஞ்சென்ற A.H.M..அஸ்ரப் ஹாஜியார் அவர்கள் புத்தக வெளியீட்டில் திரு.பொன் .பாலசுந்தரம் புத்தகம் பெறுகிறார்.



தென் கொரியாவைச் சேர்ந்த நண்பர் திரு. KIM அவர்களும்
திரு.பொன் பாலசுந்தரமும்



நீண்ட கால பாகிஸ்தான நண்பா திரு.மீனு அவர்களுடன் திரு.பொன் பாலசுந்தரம்



திருச்செல்வம் பொதுப்பணி மன்றம் அன்னை வேளாங்கன்னி மண்டப கட்டிட நிதிக்கான காசோலையை கலாநிதி நீலன் திருச்செல்வம் கோவில் நிர்வாக பாதிரியாரிடம் வழங்குகின்றார். அருகில் திரு.பொன் பாலசுந்தரம்...




என் சகோதரர் போல் பழகும் திரு.வரதராஜ் என்கின்ற ராஜி, மறு பக்கத்தில் அவரும் சகோதரர் போல் பழகிய திரு.அலிமொகமட்




இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் அறிவிப்பாளராக பணிபுரிந்தவரும் தென் இந்தியாவில் தொலைக்காட்சிகளில் புயல்கிளப்பியவருமாகிய B.H. அப்துல் ஹமீது அவர்களுடன் திரு.பொன் பாலசுந்தரம்.-கனடாவில்



இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் அறிவிப்பாளராக பணிபரிந்தவரும் தென் இந்தியாவில் தொலைக்காட்சிகளில் புயல்கிளப்பியவருமாகிய B.Hஅப்துல் ஹமீது அவர்களுடன் திரு.பொன் பாலசுந்தரம்.-கனடாவில்



நான் பிறந்த ஊராகிய புங்குடுதீவைச் சேர்ந்த, சிறு வயது முதல் நான் அறிந்த எங்கள் குடும்ப குருவாகிய பஞ்சாட்சர ஐயர் அவர்களின் புதல்வரும் கனடா வரசித்தி விநாயகர் கோவில் ஸ்தாபகரும், தலைவரும், என் மதிப்பிற்குரிய விஜயகுமார திரு.ஐயாமணி பஞ்சாட்சரக்குருக்கள் அவர்கள்



கனடாவில் சீனா மக்கள் கொண்டாடும்
சீனா விழாவில் புத்தர் பகவான்...

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ கலாநிதி நீலன் திருச்செல்வம் அவர்கள் சகலரின் கவனத்திற்கு வழங்கிய

## பண்டா - செல்வா ஒப்பந்தம் - 1

பகுதி-அ

வளர்ந்து நாட்டில் நெருக்கடியை ஏற்படுத்தி வந்த கருத்து வேற்றுமைகளை தீர்க்கும் முயற்சியாக இலங்கைத் தமிழரசுக் கட்சிப் பிரதிநிதிகள் பிர-தமரொடு தொடர்பான பேச்ச வார்த்தைகளை நடத்தினார்கள்.

உரையாடலின் தொடக்கத்திலேயே தமிழரசுக் கட்சியின் சில கோரிக்கைகளைப் பிரதமர் ஏற்பது சாத்தியமற்றது என்று தெளிவாகியது.

சமஷ்டி அரசியல் அமைப்பையோ, பிரதேச சுயாட்சியையோ ஏற்படுத்துவது பற்றிப் பேசவோ, அல்லது உத்தியோக மொழிச் சட்டத்தை அழிப்பதற்கு நடவடிக்கை எடுக்கவோ அரசாங்கத்தின் நிலையில் தன்னால் இயலாது என்று பிரதமர் கூறினார்.

இலங்கைத் தமிழரசுக் கட்சி தனது அடிப்படைக் கொள்கைகள், நோக்கங்கள் எவற்றையும் கைவடாத வகையில் ஓர் இடைக்கால ஒழுங்குக்கு வர இயலுமா என்பதை ஆராயும் கேள்வி பின் எழுந்தது.

அரசாங்கத்தின் பிரதேச சபைகள் மசோதாவை ஆராய்ந்து அதன் கீழ் இலங்கைத் தமிழரசுக் கட்சி கருத்திற் கொண்டிருக்கும் சில விடயங்களை நியாயமாக உள்ளடக்கக் கூடியதாக ஏற்பாடுகள் செய்ய இயலுமா என்று பார்க்குமாறு பிரதமர் ஆலோசனை கூறினார்.

அங்கு ஏற்பட்ட உடன்படிக்கை ஓர் தனியான பத்திரத்தில் தரப்படுகின்றது.

இடைக்கால ஒழுங்கு

மொழி விடயத்தில் இலங்கைத் தமிழரசுக் கட்சி சமஅந்தஸ்து கோரிக்கையை வலியுறுத்தியது. ஆனால் இவ்விடயத்தில் பிரதமரின் நிலையை உத்தேசித்து இடைக்கால ஏற்பாடாக ஓர் உடன்படிக்கைக்கு வந்தனர். தமிழ் ஓர் தேசிய மொழியாக அங்கீகரிக்கபடுவதும் வடக்கு கிழக்கு மாகாணங்களின் நிர்வாக அலுவல்கள் தமிழில் நடைபெறுவதும்முக்கியமானவை என்று சுட்டிக்

காட்டினர்.

தான் முன் குறிப்பிட்டதைப் போல்உத்தியோகமொழிச் சட்டத்தை அழிக்கக் கூடிய எந்த நடவடிக்கையும் எடுப்பது சாத்தியமற்றது என்று பிரதமர் கூறினார்.

கருத்துப் பரிமாறலின் பின் இயற்ற உத்தேசிக்கப்படும் சட்டத்தில் - இலங்கையின் தேசிய சிறு பான்மையோரின் மொழியாகத் தமிழை அங்கீகரிக்கவேண்டுமென்று உத்தியோக மொழியின் நிலையைப் பாதிக்காத வகையில் வடக்குக் கிழக்கு மாகாணங்களின் நிர்வாக மொழியாகத் தமிழே இருக்கும் வகையில் பிரதமரின் நாலு அம்சத் திட்டத்தில் ஏற்பாடு இருக்கவேண்டுமென்றும்வடக்கு கிழக்குமாகாணங்களில் வசிக்கும் தமிழ்பேசுவோரல்லாத சிறுபான்மையோருக்குவேண்டிய ஏற்பாடுகள்செய்யப்பட வேண்டுமென்றும் இருதரப்பினரும் ஒப்புக் கொண்டனர்.

இந்திய வம்சாவழியினருக்கு இலங்கைக் குடியுரிமை வழங்குவது பற்றியும், குடியுரிமைச் சட்டம் பற்றியும் தமது கருத்துக்களை இலங்கைத் தமழரசுக் கட்சிப் பிரதிநிதிகள் பிரதமருக்கு எடுத்து விளக்கி விரைவில் இபிபரச்சனை தீர்க்கப்பட வேண்டுமென்றும் வற்புறுத்தினர்.இப்பிரச்சனை விரைவில் பரிசீலனைக்குஎடுத்துக் கொள்ளப்படுமென்றுபிரதமர் அறிவித்தார்.

இம் முடிவுகளின் காரணமாகத் தமது உத்தேச சத்தியாகிரக நடவடிக்கையைக் கைவிடுவதாகத் தமிழரசுக்கட்சி அறிவித்தது.

பகுதி-ஆ

1.பிரதேசசபைகளின் எல்லைகள்-சட்டத்திலேயே அட்டவணையாகச் சேர்க்கப்பட்டு வரையறுக்கப்படவேண்டும்.

2. வடமாகாணம் ஒரு பிரதேச சபையாகவும்- கிழக்கு மாகாணம் இரண்டு அல்லது கூடிய பிரதேச சபைகளாகவும் அமையும்.

3. மாகாண எல்லைகளையும் தாண்டி இரண்டு அல்லது மேற்பட்ட பிரதேச சபைகள் இணைவதற்குச் சட்டத்தில் விதி இடம்பெறும். பாராளுமன்றத்தின் அங்கீகாரத்திற்கு அமைவாக ஒரு பிரதேச சபை தன்னைப் பிரித்துக் கொள்ளவும், இடம் இருக்கும். இரண்டு அல்லது மேற்பட்ட பிரதேச சபைகளுக்கு பொதுவான குறிப்பிட்ட நோக்கங்களுக்கு அவை சேர்ந்து

செயற்பட சட்டத்தில் இடம் இருக்கும்.

4. பிரதேச சபை உறுப்பினர்கள் நேரடியாகத் தெரிவு செய்யப்படுவர். அதற்கானத்தொகுதிகளை வகுப்பதற்கு தொகுதி நிர்ணயக் குழுவோ, குழுக்களோ அமைப்பதற்கு ஏற்பாடு செய்யப்படும். பிரதேச சபையின் எல்லைக்குள் அமைந்தமாவட்டங்களின் பாராளுமன்ற உறுப்பினர்- பிரதேசத் தலைவராவதற்குத் தகுதி பெறுவது பற்றி ஆலோசிக்கப்படும். அரசாங்க அதிபர்கள் பிரதேச ஆணையாளராக நியமிக்கப்படுவது ஆலோசிக்கப்படும். பெரிய பட்டினங்கள், கேந்திர நகரங்கள், மாநகரசபைகள் ஆகியவற்றை மேற்பார்வை செய்யும் அதிகாரங்கள் ஆராயப்படும்.

5.அதிகாரங்கள் பாராளுமன்றத்தினால் வழங்கப் பெற்றுச் சட்டத்தில் வரையறுக்கப்பட வேண்டும் விவசாயம், கூட்டுறவு, காணியும், காணி அபிவிருத்தியும், குடியேற்றம், கல்வு சுகாதாரம், கைத்தொழில், மீன்பிடித்துறை, வீடமைப்பு, சமூகசேவை, மின்சாரம், தண்ணீர்த் திட்டங்கள்,நெடுஞ்சாலைகள் ஆகியவை உள்ளடங்கக் குறிப்பிட்ட விடயங்கள் - பிரதேச சபைகளின் அதிகாரத்திற்குட்பட்டிருக்க வேண்டுமென்று ஒப்புக்கொள்ளப்பட்டது. வேண்டிய அதகார எல்லைகள் சட்டத்திலேயே வரையறுக்கப்படும்.

6. குடியேற்றத்திட்டங்களைப் பொறுத்தவரை தமது அதிகார எல்லைக்குட்பட்ட காணிகள் வழங்கப்பட வேண்டிய குடியேற்றவாசிகளைத் தெரிவு செய்வதும் அத்திட்டங்களில் வேலைக்கமர்த்தப்படும் ஆட்களைத் தெரிவு செய்வதும் பிரதேச சபையின் அதிகாரத்திற்குட்பட்டவையாக இருக்கும் என்று ஒப்புக் கொள்ளப்பட்டது. இப்போது கல்லோயா அபிவிருத்திச் சபையினால் நிர்வகிக்கப்படும் பிரதேசத்தின் நிலை பற்றி ஆராயப்பட வேண்டும்.

7. சட்ட மூலத்தின் பிரதேச சபைகளையொட்டி உள்ளூராட்சி அமைச்சருக்கு அளிக்கப்பட்ட அதிகாரங்களை மாற்றித் ஆதவையான இடத்தில் பாராளுமன்றத்திடம் ஒப்படைக்கும் பொருட்டு அவ்விதிகள் திருத்தப்படும்.

8. பிரதேச சபைகளுக்கு மத்திய அரசாங்கம் மொத்தமான நிதி வழங்கும். அத்தொகை கணக்கிடப்படவேண்டிய கொள்கைகள்- பின் ஆராயப்படும். பிரதேச சபைகளுக்கு வரி விதிக்கவும், கடன் வாங்கவும் அதிகாரம் இருக்கும்.

30-03-1960 இல் இடம் பெற்ற பொதுத்தேர்தலின் இறுதியில் அரசமைத்தற்குரிய பெரும்பான்மை பலம் இல்லாததால் இ/த.அ.க.வின் தயவை நாடித் தந்தை செல்வாவுக்கு நேசக்கரம் நீட்டிய ஸ்ரீ.ல.சு.க., ஐ.தே.க., ஆகியவற்றின் தலைவர்களுக்கு, இ.த.அ.க.சார்பில் அதன் தலைவர் தந்தை செல்வாநாயகம் விடுத்த குறைந்த பட்சக் கோரிக்கைகளே இவை.

## டட்லி - செல்வா ஒப்பந்தம் - 2

பொதுத் தேர்தல் முடிவுகள் - இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்கள் மிகப் பெரும்பான்மையாக எமது கட்சிக் கொள்கைகளையும், குறிக்கோள்களையும் அங்கீகரித்திருக்கிறார்கள். -என்பதைத் தெளிவாகக் காட்டுகின்றன. சுருக்கமாக் கூறின் அவையாவன:

1. இன்றைய ஒற்றையாட்சி அரசியல் அமைப்புக்குப் பதிலாகத் தமிழ் பேசும் மக்களின் பிரதேச சுயாட்சியை ஏற்றுக் கொள்ளும் இணைப்பாட்சி முறை ஏற்படுத்தப்பட வேண்டும்.

2. இந்நாட்டு ஆட்சி மொழியாகச் சிங்களத்துடன் சம அந்தஸ்து - தமிழ் மொழிக்கு மீண்டும் அளிக்கப்பட வேண்டும்.

3. இந்நாட்டிற் குடியேறி இருக்கும் இந்திய வம்சாவழித் தமிழ் மக்களுக்குக் குடியுரிமை அளிக்கப்பட வேண்டும்.

4. தமிழ் மக்களின் பாரம்பரிய பிதேசத்தில் திட்டமிட்டுச் சிங்கள மக்களைக் குடியேற்றுவது நிறுத்தப்பட வேண்டும்.

ஆயினும், தங்கள் கட்சி அரசாங்கத்தை அமைப்பதற்கு எமது கட்சிப் பாராளுமன்றக் குழு ஆதரவு அளிக்கக் கூடியதாக எமக்கிடையே உடன்பாடு ஏற்படக் கூடிய குறைந்தபட்சக் கோரிக்கைகளைக் கூறுமாறு எம்மைக் கேட்டதற்கு இணங்க தாங்கள் ஏற்றுக் கொள்ளகூடியதாக இருக்குமென்று நாம் கருதும் நான்கு அம்சங்களை இங்கு சுருக்கமாகத் தருகின்றேன். இவற்றை நாம் சமர்ப்பிப்பதனால் எமது அடிப்படைக் கொள்கைகள் எதையும் கைவிட்டு விட்டதாகக் கருதப்படக்கூடாது.

எமக்கிடையில் உடன்பாடு ஏற்படும் விடயங்கள் - அரியணை உரையில் குறிப்பிடப் பெற்ற சட்ட நடவடிக்கை மூலம் மூன்று மாதங்களில் நிறைவேற்றப்பட வேண்டும்:

1. வடமாகாணத்திற்கு ஒரு பிரதேச சபையும், கிழக்கு மாகாணத்திற்கு இரண்டு அல்லது கூடிய பிரதேச சபைகளும் தமக்குள் இணைந்து கொள்ளும் உரிமையுடன் நிறுவுவதன் மூலம்- வடக்கு- கிழக்கு மாகாணங்களுக்குப் பிரதேச சுயாட்சி வழங்குதல், விவசாயம், கூட்டுறவு, காணியும், காணி அபிவிருத்தியும், நிலப்பங்கீடும் குடியேற்றமும், நீர்ப்பாசனம், கல்வி, சுகாதாரம், கைத்தொழில்களும், மீன் பிடித்துறையும், , வீடமைப்பும் , சமூக சேவையும், மின்சாரம், தண்ணீர்த் திட்டங்கள், நெடுஞ்சாலைகள் ஆகியவை உள்ளடங்கக் குறிப்பிட்ட விடயங்களையொட்டி - அதிகாரங்கள் சட்ட மூலம் வழங்கப்பட வேண்டும். பிரதேச அமைப்புக்கள் ஏற்படுத்தப்படும் வரை - மேற்குறிப்பிட்ட அரசாங்க உதவியுடனான குடியேற்றத்திட்டங்களை நிறுத்தி வைக்கப்பட வேண்டும்.

2. இலங்கை வாழ் தமிழ்பேசும் மக்களின் தேசிய மொழியாகச் சட்டரீதியாகவும், நிர்வாக ரீதியாகவும் தமிழ் ஏற்றுக் கொள்ளப்படவேண்டும். வடக்குக் கிழக்கு மாகாணங்களின் நிர்வாக மொழியாகவும், நீதிமன்ற மொழியாகவும் தமிழ் ஆக்கப்படவேண்டும்.இப்பகுதிகளில் வாழும் தமிழ் பேசுவோரல்லாத சிறுபான்மையோருக்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்யப்படவேண்டும்.பலகலைக்கழக கல்வி உட்பட எல்லாச் சட்டங்களிலும் -தமிழ் மூலம் கல்வி கற்கும் இலங்கை முழுவதும் வாழும் தமிழ் பேசும் மக்களின் உரிமையும்- தமிழில் நடத்தப்படும் போட்டிப் பரீட்சைகளின் மூலம் அரசாங்க சேவையில் சேரும் உரிமையும் -சட்ட பூர்வமாக அங்கீகரிக்கப்பட வேண்டும்.இலங்கையின் எப்பாகத்திலும்-எந்தத் தமிழ் பேசும் மகனும் -தமிழில் அரசாங்கத்துடன் கருமமாற்றவும், கடிதத் தொடர்பு கொண்டு பதில் பெறவுமான உரிமை-சட்ட பூர்வமானதாக்கப்பட வேண்டும்.எல்லாச் சட்டங்களும் வர்த்தமானி அறிவித்தல்களும் அரசாங்கப் பிரசரங்களும், அறிவிப்புக்களும், படிவங்களும் தமிழிலும் இருத்தல் வேண்டும்.

3.1948ஆம் ஆண்டின் 18ஆம் இலக்க இலங்கைப் பிரஜாவுரிமைச் சட்டத்தின் விதி 4(1) இல் “ நியமிக்கப்பட்ட திகதிக்கு முன் ” என்பதும், விதி 5(1) ம் நீக்கப்பட்டு , அதைத் தொடர்ந்து செய்யவேண்டிய திருத்தங்கள் செய்யப்பட வேண்டும்.

4. தோட்டத் தமிழ் மக்களின் குடியுரிமை, வாக்குரிமை பிரச்சனைகள் தீர்க்கப்படும் வரை பாராளுமன்றத்திற்கான ஆறு நியமன ஸ்தானங்களில்

-நான்கிற்கு நியமிப்பதன் மூலம் இம்மக்களுக்குப் பாராளுமன்றத்தில் பிரதிநிதித்துவம் வழங்குவதுடன், அப்படி நியமிக்கப்படுவோர்-இம்மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அரசியல் நிறுவனமான இலங்கை ஜனநாயக காங்கிரஸினால் தெரிவு செய்யப்படுவோராக இருக்க வேண்டுமென்ற சம்பிரதாயம் ஏற்கப்பட வேண்டும்.

மேற் கண்ட பந்திகளிற் குறிப்பிடப்படாத விபரங்களும் ஏனைய அம்சங்களும்-அரசாங்கத்திற்கும் கட்சிக்குமிடையில் பேச்சு வார்த்தை மூலம் தீர்க்கப்பட வேண்டும்.

## யோகாசனம்..

மனிதன் ஆரோக்கியமாக வாழ வேண்டுமெனில் யோகாசனம் பயில்வது மிகவும் முக்கியம். போகாசனம் பயில்வதற்கு வயது எல்லை இல்லை. ஐந்து வயதில் இருந்து எண்பது வயது வரை பயில முடியும். அதற்கு தனியான இடமோ, உபகரணங்களோ தேவை இல்லை. ஆர்வமும், அக்கறையும் இருந்தால் போதுமானது.

இந்தியாவில் 2000 ம் வருடங்களுக்கு முன்பு வாழ்ந்த யோகிகள் இதனை சிரமேற்கொண்டு கற்றுத்தேறி மக்கள் நலம் பெற தந்துள்ளனர். அவர்களும் நீண்ட காலம் வாழ்ந்துள்ளனர். நீங்களும் ஒரு யோகாசன ஆசிரியரிடம் சில காலம் பயின்றால் அதன் மேல் உங்கள் வீட்டிலேயே செய்யக்கூடியதாக இருக்கும். ஆண்கள், பெண்கள் எவரும் செய்யலாம்.

நேரம் உள்ளவர்கள் காலை மாலை அரை மணித்தியாலங்கள் செய்வது உத்தமம். வேலைக்குப் போகிறவர்கள், பாடசாலை போகும் மாணவ மாணவியர்கள் காலை மாலை 10 நிமிடங்கள் செய்தால் போதுமானது. ஒரு நாளைக்கு இரண்டு தடவைகள் செய்தால்தான் முழுமையான பலன் பெறலாம்.

பாடசாலை செல்லும் மாணவர்களுக்கு படிக்கும் பாடங்கள் ஞாபகத்தில் வைத்திருக்க நினைவாற்றல் அதிகரிக்கட சில ஆசனங்கள் உண்டு.

வேலைக்குப் போகிறவர்கள் சில ஆசனங்கள் செய்தால் கஸ்டமான வேலையாயினும் களைப்பு ஏற்படாது. சுறு சுறுப்பாய் இயங்குவார்கள். ஆசனங்கள் செய்யும்போது உடம்பில் உள்ள எல்லா அவயவங்களுக்கும்

இரத்த ஓட்டம் சீரான முறையில் ஏற்படுவதனால் சுத்தமான நாடி நரம்புகளும் உயிர்பிக்கப்படுகின்றன.

நோய்கள் ஏற்பட்டால் மாற்றவும் முடியும். வராமல் பாதுகாக்கவும் முடியும். முதுமையையும் தள்ளிப் போடப் படுகின்றது. காலைக் கடன்களை முடித்துக்கொண்டு வெறு வயிற்றுடன்தான் யோகாசனம் செய்வது உத்தமம்.

வேலைக்கு போகிறவர்கள் சிலர் நேரம் இல்லை என்பார்கள். 24 மணித்தியாலத்தில் உங்கள் உடல் ஆரோக்கியமாக இருக்க உங்களால் ஒதுக்க முடியவில்லையானால் நோய்களைச் சுமந்து வைத்தியர்களை தேடி ஓட வேண்டிவரும். நீங்கள் எவ்வளவு பணம் தேடித்திரிந்தாலும் அதனை அனுபவிக்க முடியாமல் போகலாம்.

முக்கிய சில ஆசனங்கள்:.

1. பத்மாசனம்
2. பாதகஸ்தாசனம்
3. புடங்காசனம்
4. பக்திமோத்தாசனம்
5. சலபாசனம்
6. யோககித்தா
7. திருகோணாசனம்
8. உத்தான பாதாசனம்
9. பவனமுத்தாசனம்
10. உட்கட்டாசனம்
11. சர்வ அங்க ஆசனம்
12. கடைசியாம் படர்த்திஆசனம் . உடம்பை சோரப்போட்டு மல்லாந்து படுத்தி முப்பது நிமிடங்கள் வரை செய்வது உத்தமம்.

எல்லோரும் வாழ்க வளமுடன்.

இவ்வண்ணம்
**சிவபாதன்.**

# திருமண அழைப்பிதழ்

அன்புடையீர்!

நிகழும் பிரமாதீச வருடம் ஐப்பசித் திங்கள் 27ம் திகதி (12-11-73) திங்கட்கிழமை அமிர்த யோகமும், ரோகிணி நட்சத்திரமும் கூடிய சுபதினத்தன்று கொழும்பு, முகத்துவாரம் ஸ்ரீமத் அருணாசலேஸ்வரசுவாமி கோவிலில் காலை 10 மணி 48 நிமிஷம் முதல் 12 மணி 32 நிமிஷம் வரையிலுள்ள மகர லக்கின சுபமுகூர்த்தத்தில்

| | | |
|---|---|---|
| எனது சிரேஸ்ட புத்திரன்<br>பாலசுந்தரத்துக்கும்<br>பங்காளர் பாலகிருஸ்ண ரேடர்ஸ்<br>228, 4ம் குறுக்குத் தெரு, கொழும்பு | ★ | எனது கனிஸ்ட புத்திரி<br>தெய்வநாயகிக்கும் |

திருமணம் செய்துவைக்கப் பெரியோர்களால் நிச்சயித்திருப்பதால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சமேதராய சமுகந் தந்து மணமக்களை ஆசீர்வதித்தேகுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

அவ்வண்ணமே கோரும்:

இ. பொ. பாலசிங்கமும் பாரியாரும்
(மணமகனின் பெற்றோர்)
புங்குடுதீவு 11.

இங்ஙனம்,
திருமதி இ. தங்கம்மா
(மணமகளின் பெற்றோர்)
வட்டுக்கோட்டை.

**Mrs. & Mr. R. P. Balasingam** (of Punguduthivu 11) AND **Mrs. R. Thangamma** (of Vaddukoddai)

request the pleasure of your company
with family and friends
on the occasion of the marriage of their

Son
Selvan: **Balasundaram**
(Partner)
Balakrishna Traders
228, 4th Cross Street, Colombo.

with

Daughter
Selvi: **Theivanayagi**

on Monday the 12th November, 1973
between 10-48 a. m. and 12-32 p. m.
at Srimath Arunasaleswaraswamy Kovil, Mutwal, Colombo.

Telegrams: 120, KATHIRESAN STREET, COLOMBO-13.

பிரதிகள் :

அரசாங்க அதிபர் – கொழும்பு
உயர் நீதிமன்ற நீதியரசர் – கொழும்பு
நீதிவான் – கொழும்பு
மாவட்ட நீதியரசர் – கொழும்பு

எனது இல. : பா 15/1/எஸ்/28/95
நீதி அமைச்சு,
கொழும்பு 12,

1995.. யூன்.. 25 ஆந் திகதி.

ஐயா,

..கொழும்பு.......... நீதி மாவட்டத்திற்கான சமாதான நீதிவானாகத் தாங்கள் நீதி அமைச்சரினால் நியமிக்கப்பட்டுள்ளமையைத் தங்களுக்கு அறிவிக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளேன்.

02. 1978 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க நீதித்துறைச் சட்டத்தின் 45 (4) ஆம் பிரிவின்கீழ் ...ளால் சத்தியப்பிரமாணம்/உறுதிப்பாடு செய்துகொள்ளப்பட வேண்டியிருப்பதனால் இப்பிரிவிற்குத் ...ன் கவனம் கோரப்படுகின்றது.

03. தாங்கள்........கொழும்பு.........நீதி மாவட்டத்தில் வசிக்கின்ற காலப்பகுதியில் மட்டுமே என்பதோடு அப்பிரதேச வதிவாளருக்குத் தங்கள் சேவை கிடைக்கப்பெறும் வகையில் மட்டும் இந்த நியமனம் செல்லுபடியானதாய் அமையும்.

04. பொதுமக்களது பயன்பாட்டிற்காக மட்டுமே இந்த நியமனம் செய்யப்பட்டுள்ளது.

05. சத்தியவோலைகளை அன்றேல் ஏதேனும் பிற சாதனங்களை அத்தாட்சிப்படுத்தும் தங்களது சேவைக்காக கட்டணம் எதனையும் அறவிடுவதற்குத் தங்களுக்கு உரித்தில்லை.

06. தங்கள் தகவலுக்காக 1978 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க நீதித்துறைச் சட்டத்தின 45 (4) ஆம் பிரிவின் பிரித்தெடுத்த பகுதியொன்று இணைக்கப்பட்டுள்ளது.

07. இந்த நியமனமானது அரசாங்க வர்த்தமானியில் வெளியிடப்படும் வரையில் பயனுறுதி உடையதாய் அமையாதென்பதைக் கவனத்திற் கொள்க.

தங்கள் உண்மையுள்ள,

தாரணி எஸ். விஜயதிலக்க,
நீதி அமைச்சின் செயலாளர்.
நீதி, அரசியலமைப்பு அலுவல்கள்
அமைச்சின் செயலாளர்.

திரு. பாலசிங்கம் பாலசுந்தரம்
இல. 120,
ஸ்ரீ கதிரேசன் வீதி,
கொழும்பு 13.

## மணிவிழா மணி வாசலில்.....

வணக்கம்...

உலக படைப்புக்களில் "அரிது அரிது மானிடராய் பிறத்தல் அரிது" என்ற வாக்கிற்கமைய மனிதனாய் பிறந்தால் மண்ணில் மாதவம் செய்திட்டோம். ஊர் போற்ற, உலகம் போற்ற வாழ்வது கடினமாகும். இருப்பினும் இங்கே ஊர் போற்ற, உலகம் போற்ற, தாம் பெற்ற பிள்ளைகள் வாழ்த்த, வையகத்தில் வாழ்வோர் வாழ்த்த அகவை அறுபதில் கால்தடம் பதிக்கும் திரு. பா.பாலசுந்தரம், திருமதி.பா.தெய்வநாயகி இருவரும் நூற்றாண்டை தாண்ட பலகோடி வாழ வாழ்த்தி....

இந்த மணிவிழா சிறப்பு மலரினை என்னிடம் ஒப்படைத்த காலப்பகுதி மிகக் குறுகியதாகும். இருப்பினும் இம் மலரினை மிகவும் சிறப்புடன் அமைக்க வாழ்த்துக்கள் வழங்கிய பெரியோர்கள், கல்விமான்கள், அன்பர்கள், நண்பர்கள் மற்றும் குறுகிய காலப்பகுதியில் கணணி வடிவமைத்து , சிறந்த முறையில் அச்சிட்டுத் தந்த அச்சகத்தினருக்கும் மற்றும் சகல வழிகளிலும் இம்மலருக்காக உழைத்த அனைவருக்கும், மணிவிழாக் காணும் தம்பதிகள் சார்பில் நன்றிகளைக் கூறுகின்றோம்.

ஒரு மனிதன் இந்த சமுதாயத்தில் எவ்வாறு வாழ்ந்தான், எவ்வாறு முன்னேறினான், எவ்வாறு புகழ் பெற உழைத்தான் என்பதை பார்க்க விளையும்போது இன்றைய மணிவிழாத் தம்பதிகள் தமது வாழ்க்கை சக்கரத்தை இந்த மலரினூடாக பதிக்கின்றனர்.இவர்கள் தமது சந்ததிக்கு ஒரு பின்னணி உருவாக்கத்திற்கு நல்வழிகாட்டியாக திகழும் இவ்வேளை இந்த சிறப்பு மலரும் ஒரு சான்றாகும்.

நூலாசிரியர்-<br>
கலாவித்தகர்.<br>
**நா.செந்தூர் செல்வன்.**

# என் வாழ்க்கை

நான் புங்குடுதீவு கிழக்கு கிராமத்தில்பிறந்தேன். ஆரம்ப கல்வியைக் கணேசவித்தியாலத்திலும்,பின்கொழும்பு விவேகானந்தா மகா வித்தியாலயத்திலும் கல்வி கற்றேன். பின்னர் கொழும்பு பஜார் கடையில் வேலை பார்த்தேன். வர்த்தகம் பழகிய பின் கடையை விட்டு பஜாரில் பொருட்கள் வாங்கி வியாபாரம் செய்தேன். அதை செய்து கொண்டிருக்கும் வேளையில் நான்காம் குறுக்குத் தெருவில் ஒரு கடையின் முன் முகப்பில் தொழில் செய்ய இடம் கிடைத்தது. அந்த கடையின் பெயர் " பொன் பாலன் ரேடர்ஸ்". அந்தத் தொழிலில் பங்காளியாக மலையகத்தைச் சேர்ந்த நண்பர் பொன்னுசாமி சேர்ந்தார். அவர் குறிப்பிட்ட கால எல்லையில் விலகி விட்டார். பின்பு என் ஊரைச் சேர்ந்த உறவினர் தம்பிப்பிள்ளை கிருஷ்ணசாமி வியாபாரத்தில் பங்காளியாகச் சேர்ந்தார். வியாபார கடையின் பெயர் " பாலகிருஷ்ணா ரேடாஸ்". இருவரும் உழைப்பு என்ற குறிக்கோளில் வியாபாரம் நடத்தி முன்னேற்றம் அடைந்தோம்.

அவ்வேளையில்தான் என் திருமணம் நடைபெற்றது. வட்டுக்கோடடையைச் சேர்ந்த என் உறவுப் பெண் மலேசியப் பென்சனியர் கதிரவேலு ராமசாமி மகளுக்கும், என் அப்பாவின் சகோதரி உறவுமுறையான தங்கம்மாவின் மகள் தெய்வநாயகியை மனம் விரும்பி திருமணம் செய்து கொண்டேன்.கொழும்பு முகத்துவாரம் அருணாச்சலலேஸ்வரர் கோவிலில் எங்கள் திருமணம் நடந்தது.1973ஆம் நடந்த இனக்கலவரத்தில் பாலகிருஷணா ரேடர்ாஸ் கடை முற்றாக எரிந்து நாசமாகியது.

## நன்றியுரை

மணிவிழாவை மிகவும் சிறப்பாக அமையப் பெற உதவிய நண்பர்கள், உற்றார், உறவினர், சமூகப் பெரியோர்கள், வாழ்த்து உரை வழங்கிய சகலருக்கும், விழா மலரை சிறப்புற அச்சிட்டு உதவிய அச்சமைப்பாளருக்கும், சிறப்புடன் ஒழுங்கமைத்த அனைவருக்கும் எங்கள் உளம் கனிந்த நன்றிகள் ! நன்றிகள்!!.

**பிள்ளைகள், மருமக்கள்**

brightsun print
416-845-6565